# இஸ்லாமிய மூலாதாரங்களில் நல்லோர்களின் பொருட்களைக்கொண்டு பரக்கத் தேடுவது பற்றி ஓர் ஆய்வு

இஸ்லாமிய மூலாதாரங்களை நமக்கு கொண்டு வந்து சேர்த்த மூதாதையர்களை சாதாரண மனிதர்களாக முஸ்லிம் மக்கள் மத்தியில் வெளிக்காட்டும் பொழுது அவர்களால் கொண்டுவந்த மூலாதாரங்களும் வலுவற்றதாக நம்பகத்தன்மை அற்றதாக ஆகிவிடும். எனவே இவ்விலக்கை மிக இலகுவாக அடைந்து கொள்ள இஸ்லாமிய எதிரிகள், நல்லோர்கள் என சொல்லப்படுபவர்கள் சாதரண மனிதர்கள். அவர்களிடத்தில் ஏனைய மனிதர்களை விட விசேட தன்மை எதுவும் கிடையாது என்ற நச்சுக்கருத்தை இஸ்லாமிய மக்கள் மத்தியில் பரப்பி விட்டனர். அதன் விளைவாக இன்று நமது சமூகத்தினர் மத்தியில் நல்லோர்கள் பாவித்த அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்ட பொருட்களில் பரக்கத் கிடையாது அப்பொருட்களும் நம்மால் பாவிக்கப்பட்ட பொருட்களை போன்றதே என்ற தப்பான அபிப்பிராயம் நிலவி வருவதை காணமுடிகிறது. உண்மையில் குர்ஆன் சுன்னா இமாம்களின் கருத்துக்கள் அதுமட்டுமல்ல நவீனவதிகளின் தலைவர்களின் கருத்துக்கள் அனைத்தும் நல்லோரிலும் நல்லோர்களோடு சம்மந்தப்பட் பொருட்களிலும் பரக்கத் இருக்கின்றது, அதை நாம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை தெளிவுபடுத்துகின்றது.

அதுமட்டுமல்ல ஸஹாபாக்கள் தாபியீன்கள் அனைவரும் இவ்வாறான பரக்கத்தை பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டியுள்ளதை புஹாரி முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் நிறையவே காணமுடிகின்றது. இன்று பரகத்தேடுபவர்களை காபிர் முஸ்ரிக் என்று சொல்லக்கூடியளவிற்கு எமது சமூகத்தினரின் நிலை தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு சொல்வதற்கு காரணமாக கூறப்படும் நியாயம் எவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதல்ல என்பது பாமரர்களுக்கு கூட தெரிந்த விடயம்.

ஏனென்றால் யாரிடத்திலிருந்து பரகத்தை தேடுகிறார்களோ அவரை வணங்குவதாக அச்செயல் குறிக்குமென்று சொல்லும் பொழுது நபி (ஸல்) அவர்களிடத்திலிருந்து பரகத்தை தேடிய ஸஹாபாக்களின் நிலை என்ன? அதை அங்கீகரித்த நபி (ஸல்) அவர்களின் நிலைதான் என்ன? அவர்களையும் முஸ்ரிக்குகள் என்று நமது சமூகம் கூற முற்படுமா? சற்று சிந்தித்து பார்க்கவேண்டும்

அதுமட்டுமல்ல ஸஹாபாக்கள் நபி (ஸல்)அவர்கள் பாவித்த பொருட்களிலிருந்து பரக்கத்தை தேடியதாக கூறப்படும் சந்தர்ப்பங்களில் பரக்கத்தை அவர்கள் நாடவில்லை, என்றும் இன்னும் நபி (ஸல்)அவர்கள் உயிரோடு உள்ளபொழுது மாத்திரம் பரக்கத்தை நாடமுடியும், என்றும் அவர்களுடைய மரணத்திற்கு பிறகு முடியாது என்ற வாதத்தையும் நவீன வாதிகள் இணையத்தளங்களின் மூலமாக மக்கள் மத்தியில் பரப்பிவிடுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

ஆனால் வியப்பு என்னவென்றால் இவ் நவீனவாதிகளால் புகழப்படக்கூடியவரும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவருமான இப்னு தைமியா என்பவர் நபி (ஸல்)அவர்கள் வுழுச்செய்த தண்ணீரில் பரகத்திருக்கின்றது என்றும் அதை ஜாபிர் (ரழி) அவர்கள் நோயாளியாக இருக்கும் பொழுது அதை அவர்களின் மீது ஊற்றப்பட்டது என்றும் அத்தண்ணீரைக்கொண்டு ஸஹாபாக்கள் பரக்கத்தை நாடக்கூடியவர்களாக இருந்தார்கள் என்றும் தனது கிரந்தத்தில் கூறியுள்ளார் (மஜ்மூவுல் பதாவா பக்கம் 599 பாகம்12)

والماءالذي توضأ به النبي صلىالله عليه وسلم هو أيضا ماء مبارك صب منه على جابر وهو مريض وكان الصحابة يتبركون به( مجموع الفتاوى

(599-12

எனவே இதை பார்க்கின்ற பொழுது தங்களது கொள்கையினை சரியாக விளங்காமையினாலேயே ஸஹாபாக்கள் நபி (ஸல்)அவர்களிடத்திலிருந்து பரகத்தை நாடவில்லை என்ற வாதம் வந்திருக்கலாம் என்பது புலப்படுகிறது. ஏனென்றால் அவர்களால் புகழப்படக்கூடியவரும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவருமான இப்னு தைமியாவே பரக்கத்தை ஸஹாபாக்கள் நாடியிருக்கிறார்கள் என்று தெளிவாகவே கூறியுள்ளார்.

அபூபக்கர் (ரழி) அவர்களுடைய மகள் அஸ்மா (ரழி) அவர்கள் அப்துல்லா இப்னு கைஸான் (ரழி) என்ற ஸஹாபிக்குசொன்னார்கள் இது நபி (ஸல்) அவர்களுடைய ஜுப்பா இது ஆயிஷா(ரழி) அவர்களிடத்தில் காணப்பட்டது அவர்களுடைய மரணத்திற்கு பிறகு அதை நான் எடுத்துக்கொண்டேன் இதை நபி (ஸல்) அவர்கள் அணியக்கூடியவர்களாக இருந்தார்கள் இதை நோயாளிகளுக்கு கழுவிக்கொடுத்து நாங்கள் நோய் நிவாரணத்தை தேடிக்கொள்வோம் என நவின்றுள்ளார்கள். (ஆதாரம் : முஸ்லிம் பக்கம் 190 பாகம் 2 )

عن أسماء بنت ابي بكر انها خرجت جبة طيالسة كسروانية لها لبنة ديباج وفرجيها مكفوفين بالديباج فقالت هذه كانت عند عائشة حتى قبضت فلما قبضت قبضتها وكان النبي صلىالله عليه وسلم يلبسها فنحن نغسلها للمرضى نستشفي بها (مسلم-12-190)

அபூஹீரைரா (றழி)அவர்கள் அறிவிக்கின்றார்கள் நான் மதீனாவுக்கு சென்றவேளை என்னை அப்துல்லா இப்னு ஸலாம் (றழி) அவர்கள் சந்தித்து "என்னுடைய வீட்டிற்கு வாருங்கள் உங்களுக்கு நான் நபி (ஸல்) அவர்கள் குடித்த பாத்திரத்தில் தண்ணீர் அருந்தத்தருகிறேன் அத்துடன் நபி (ஸல்) அவர்கள் தொழுத பள்ளியில் உங்களுக்கும் தொழ முடியும்" என்று சொன்னார்கள். நான் அவருடன் சென்றேன் அப்பொழுது தண்ணீரும் ஈத்தம்பழமும் எனக்கு தந்தார்கள் அத்துடன் அந்தப்பள்ளியிலும் நான் தொழுதேன் என்று கூறினார்கள். (ஆதாரம் புஹாரி ,கிதாபுல் எ.்.திஷாமி பில் கிதாபி வஸ் சுன்னா )

عن ابي هريرة قال قدمت المدينة فلقيني عبد الله بن السلام فقال لي انطلق الى المنزل فأسقيك في قدح شرب فيه رسول الله وتصلي في مسجد صلى فيه النبي صلرالله عليه وسلم فانطلقت معه فسقاني واطعمني تمرا وصليت في مسجده (بخاري كتاب الاعتصام بالكتاب والسنة )

ஸபிய்யா பின்து முஜ்ஸியா (றழி) அவர்களின் வாயிலாக அறிவிக்கப்படுகின்றது அபா மஹ்தூரா (றழி) அவர்களின் தலையின் முன்பகுதியில் அவர்கள் அமர்ந்தால் பூமியில் தட்டுமளவிற்கு ஒருமுடிக்கும்பம் காணப்பட்டது அதை நீங்கள் சிரைக்கக்கூடாதா? என்று ஸஹாபாக்கள் கேட்டபொழுது அதில் நபி(ஸல்) அவர்கள் தங்கள் கையினால் தடவியுள்ளார்கள் எனவே நான் அதை மரணிக்கும் வரை சிரைக்கமாட்டேன் என்று கூறினார்கள். (ஆதாரம் மஜ்மவுல் சவாயித் பக்கம் 518 பாகம் 3)

عن صفية بنت مجزأة أن أبا مخذورة كانت له قصة في مقدم رأسه اذا قعد أرسلها فتبلغ الأرض فقالوا له ألا تحلقها فقال رسول الله صلى الله عليه وسلم مسح عليها فلم أكن لاحلقها حتى أموت رواه الطبراني وكذا في مجمع الزوائد (518-3)

எனவே மேற்கூறப்பட்ட ஹதீதுகளிலிருந்து நபி(ஸல்) அவர்களுடைய மரணத்திற்கு பிறகு நபி(ஸல்) குடித்த பாத்திரம் தொழுதபள்ளி அவர்களின் கைபட்ட முடி, ஜுப்பா அனைத்தையுமே ஸஹாபாக்கள் பரக்கத்தாக கருதியுள்ளார்கள் என்பதை தெளிவாக விளங்கமுடிகின்றது.

தாபித்துல் பன்னானி (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் நான் அனஸ் (றழி) அவர்களிடத்தில் வந்தால் அவர்கள் நான் உட்காருமிடத்தை எனக்கு அறிவிப்பார்கள் அவ்வாறு அவர்களிடத்தில் நான் சென்றால் அவர்களுடைய இரு கரங்களையும் கண்களையும் இவைகள் நபி (ஸல்) அவர்களை தொட்ட கரங்களல்லவா! இவைகள் நபி(ஸல்)அவர்களை பார்த்த கண்களல்லவா! என்று கூறியவாறு முத்தமிடுவேன். என்று கூறினார்கள். (ஆதாரம் மதாலிபுல் ஆலியா பக்கம் 111பாகம்2)

عن ثابت البناني قال كنت اتيت انسا يخبر بمكاني فأدخل عليه فآخذ بيديه فاقبلها وأقول بابي هاتاني اليدان اللتان مستا رسول الله صلى الله عليه وسلم وأقبل عينيه وأقول بأبي هاتان العينان اللتان رأتا رسول الله عليه وسلم

(111-2 المطالب العالية)

நபி(ஸல்) அவர்களைத் தொட்ட பார்த்த கண்களை பரக்கத்தாக கருதி முத்தமிட்டிருப்பதை மேற் கூறப்பட்ட அதரின் மூலமாக விளங்க முடிகின்றது இவ்வாறு பரக்கத் தேடுவது சிர்க்காயிருந்திருந்தால் நபி(ஸல்) அவர்களிடத்தில் ஒன்பது வருடம் தொண்டாற்றிய அனஸ்(றழி)அவர்கள் அவ்வாறு முத்தமிட அங்கீகரித்திருப்பார்களா? என்பதை சற்று சிந்தித்துப்பார்க்கவேண்டும்

அதுமட்டுமல்லாமல் நவீனவாதிகளால் அங்கீகரிக்கப்படக்கூடிய இப்னு கதிர் அவர்கள் தன்னுடைய கிரந்தமாகிய அல் பிதாயா வன்னிஹாயா என்ற கிரந்தத்தில் முஆவியா (றழி) அவர்களுக்கு நபி(ஸல்) அவர்களால் அணிவிக்கப்பட்ட ஆடையில் தன்னை கபன் செய்யுமாறும் தன்னிடத்தில் காணப்படும் நபி(ஸல்) அவர்களுடைய முடி, நகத்துண்டுகளை தன்னுடைய வாயிலும் மூக்கிலும் கண்களிலும் காதுகளிலும் வைக்கமாறு தன்னுடைய மகனுக்கு வஸிய்யத்து செய்தார்கள் என்றும் தன்னுடைய மரண நாளுக்காக அந்த ஆடையை பாதுகாத்து வந்தார்கள் என்ற விடயத்தையும் கூறியுள்ளார்கள் (ஆதாரம் அல் பிதாயா வன்னிஹாயா 179 பாகம் 8 அல்லது 98-80)

أنه أوصى (معاويةرضي الله عنه ) اليه ان يكفن في ثوب رسول الله صلى الله عليه وسلم الذي كساه اياه وكان مدخرا عنده لهذا اليوم وان يجعل ما عنده من شعره وقلامة أظفاره في فمه وأنفه وعينيه وأذنيه (البداية والنهاية

(98-8\ 8-179 -8

பரக்கத்தை கருதா விட்டால் முஆவியா (றழி) இவ்வாரு செய்யுமாறு தனது மகனுக்கு வஷியத்து செய்திருப்பார்களா?
இச்செயல் சிர்க்காக இருந்தால் நவீனவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மாமேதை என்று போற்றப்படக்கூடிய இப்னு
கதிர் அவர்கள் முஆவியா (றழி) அவர்களுடைய சிறப்புக்களை கூறக்கூடிய பாடத்தில் இதை எவ்வாறு எடுத்துரைக்க
முடியும். இதை அவர்களுடைய சிறப்பாக எடுத்துக்கூறும் மாமேதை என போற்றப்படும் இப்னு கதிர் அவர்களுடைய
நிலையை எவ்வாறு நவீனவாதிகள் வர்ணிப்பார்கள்.

அப்துர் ரஹ்மான் இப்னு அப்துல் காதிரின் வாயிலாக அறிவிக்கப்படுகின்றது இப்னு உமர் (றழி) அவர்கள் நபி (ஸல்)
அவர்களுடைய மிம்பரில் நபி (ஸல்) அவர்கள் இருந்த இடத்தில் கையை வைத்து அதை பிறகு தன்னுடைய
முகத்தில் வைப்பவர்களாக ஆகியிருந்தார்கள் (ஆதாரம் தபகாத் இப்னு ஸஃத் )

وسلم ثم عنه يضع يده على مقعد منبر النبي صلى الله عليه الله عن عبد الرحمن بن عبد القادر كان بن عمر رضي يضعها على وجهه

(طبقات بن سعد)

பெருமனாரின் ஒரு சுன்னத்தைக்கூட விடாமல் பின்பற்றுவதனால் ((முத்தபிவு சுன்னா )சுன்னத்தை பின்பற்றக்கூடியவர்
என்று அழைக்கப்படும் சஹாபியாகிய இப்னு உமர்(றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் இருந்த இடத்தை முத்தமிட்டு
இருக்கின்றார்கள் என்றால் எப்படி நலல்வர்களோடு சம்மந்தப்பட்ட பொருட்களிலிருந்து பரக்கத்தேடுவது சிர்க்காகும்.

அதே போன்று இமாம் அஹ்மது இப்னு ஹம்பல் (றஹ்) அவர்களாகிய எனது தந்தை நபி (ஸல்) அவர்களுடைய
முடியை எடுத்து அதை வாயிலும் கண்ணிலும் வைப்பவர்களாகவும் அதை தண்ணீரில் கழுவி குடித்து நோய்
நிவாரணம் தேடுபவர்களாக நான் பார்த்துள்ளேன் என்று அப்துல்லா இப்னு ஹம்பல் (றஹ்) அவர்கள் அறிவித்த
விடயத்தை நவீன வாதிகள் அங்கீகரிக்கக்கூடிய தஹபி என்ற அறிஞர்,அறிவிக்கின்றார். (ஆதாரம் ஸியருஅஃலாமு
நுபலா பக்கம்212 பாகம் 11)

رأيت أبي (اي احمد بن حنبل رحمه الله ) يأخذ شعرة من شعر النبي صلى الله عليه وسلم فيضعها على عينيه ويغمسها في الماء ويشربه يستشفي به (سير أعلام النبلاء 11-212)

எனவே இன்றைய காலத்து நவீனவாதிகளால் மாமேதைகள் அறிஞர்கள் என போற்றி புகழப்படுகின்றவர்கள் கூட
தங்களின் கிரந்தங்களில் கூறியுள்ளதை ஏற்கின்ற மனப்பான்மையற்றவர்களாகவே இவர்களின் செயற்பாடுகள்
அமைந்துள்ளமை உள்ளங்கை நெல்லிக்கனியாக உணரக் கூடியதாக உள்ளது

உர்வா (றழி) அவர்கள் கூறினார்கள் நான் கைஸர், கிஸ்ரா, நஜ்ஜாஸி போன்ற பல அரசர்களிடத்தில் சென்றுள்ளேன்
அல்லாஹ்வின் மீது சத்தியமாக நபி (ஸல்) அவர்களை அவர்களுடைய தோழர்கள் சங்கைப்படுத்துவதைப்போல எந்த
ஒரு பிரஜையும் அவர்களுடைய அரசர்களை சங்கைப்படுத்தியதாக நான் பார்த்ததில்லை எந்தளவுக்கென்றால் நபி
(ஸல்) அவர்கள் எச்சிலைத் துப்பினால் அவர்கள் அதை பிடித்து தோழிலும் முகத்திலும் தேய்த்துக்கொள்கிறார்கள்
அவர்கள் வுழு செய்தால் அத்தண்ணீருக்காக அத்தோழர்கள் போட்டி போடுகின்றார்கள் என்று கூறினார்கள் (ஆதாரம்
புஹாரி பக்கம் 379 பாகம் 1)

قال عروة والله لقد وفدت على قيصر وكسرى والنجاشي والله ان رأيت ملكا قط يعظمه اصحابه ما يعظم اصحاب محمد صلى الله عليه وسلم محمدا والله ان يتنخم نخامة الا وقعت في كف رجل منهم فدلك بها وجهه وجلده واذا توضأ كادوا يقتتلون على وضوءه (بخاري 1-379)

நபி (ஸல்) அவர்களுடைய சிறுநீரை குடித்த உம்மு அய்மன் (றழி) அவ்களுக்கு இனிமேல் வயிற்று நோய் உனக்கு
வராது என்றும் சிறுநீரை குடித்த மற்றொரு ஸஹாபி பெண்மணியாகிய பரகாவுக்கு உன்னை நரகம் தீண்டாது என்றும்
நபி (ஸல்) அவர்கள் கூறிய ஹதீதுகளை நிறையவே பல கிரந்தங்களில் காணலாம (ஆதாரம் ஹாகிம், ஹீல்யா,
மஜ்மவுல் ஸவாயித், தாரிஹ்திமஸ்க், அல்பிதாயா வன்னிஹாயா, அல் இசாபா, சுனனுல் குப்ரா, அல்கபீர், அல்ஆஹாத
வல் மதானி)

عن أم أيمن رضي الله عنها قالت قام النبي صلى الله عليه وسلم من الليل الى فخارة من جانب البيت فبال فيها فقمت من الليل وانا عطشى فشربت من في الفخارة وأنا لا أشعر فلما أصبح النبي صلر الله عليه وسلم قال يا أم أيمن قومي الى تلك الفخارة فأهريقي ما فيها قلت قد والله شربت ما فيها قال فضحك رسول الله عليه وسلم حتى بدت نواجده ثم قال أما انك لا يفجع بطنك بعده أبدا

(اخرجه الحاكم في المستدرك 4-70 رقم الحيث 6912 -ا لحلية 2-67 - مجمع الزوائد 8-271 - تاريخ دمشق – 4-303 -البداية والنهاية 5-326 -الاصابة 8- 171 الآحاد والمثاني 6-121 الرقم 3342 االبيهقي في السنن الكبرى 7-67 الرقم 13184 -الطبراني في الكبير 24 -189 )

இப்னு ஜத்ஆன (றழி) அவர்களின் வாயிலாக அறிவிக்கப்படுகின்றது தாபித்(றஹ்) அவர்கள் அனஸ்(றழி) அவர்களிடத்தில் உங்களுடைய கரத்தினால் நபி(ஸல்) அவர்களை தொட்டுள்ளீர்களா? என்று கேட்டார்கள் அதற்கு அவர்கள் ஆம் என்று சொல்ல அக்கரங்களை முத்தமிட்டார்கள் என்று கூறினார்கள் (ஆதாரம் அதபுல் முப்ரத் பக்கம் 144 )

عن بن جدعان قال ثابت لأنس رضي الله عنه أمسست النبي صلى الله عليه وسلم بيدك ؟قال نعم فقبلها (اخرجه البخاري في الادب 144)

சுகைப்(றழி) அவர்களின் வாயிலாக அறிவிக்கப்படுகின்றது

அலி (றழி) அவர்கள், அப்பாஸ் (றழி) அவர்களுடைய கரத்தையும் இரு கால்களையும் முத்தமிட நான் கண்டேன் எனக் சுகைப்(றழி) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம் அதபுல் முப்ரத் 144)

عن صهيب قال رايت عليا رضي الله عنه يقبل يد العباس رضي الله عنه ورجليه (اخرج البخاري في ادب المفرد 144)

எனவே மேற்கூறப்பட்டவைகளிலிருந்து ஸஹாபாக்கள், தாபியின்கள் அனைவரும் நபி(ஸல்) அவர்களின் மரணத்திற்கு பிறகு அவர்களின் அவயவங்கள் பட்ட இடங்களைக்கொண்டு பரக்கத் தேடியுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது

அல்கமா (றழி) அவர்களின் உம்மா அறிவிக்கின்றார்கள் முஆவியா (றழி) அவர்கள் மதீனாவுக்கு வந்தபொழுது நபி(ஸல்) அவர்களுடைய அன்ஜுபானியத்து என்ற ஆடையையும் முடியையும் ஆயிஷா (றழி) கேட்டு அனுப்பியபொழுது அதை அவர்கள் அனுப்பியதும் அவ்வாடையை அணிந்தார்கள் அத்துடன் தண்ணீரைக் கொண்டுவரும்படி ஏவி தண்ணீரில் அதை கழுவி குடித்தும் தனது தோலிலும் அதை ஊற்றிக்கொண்டார்கள் என்று நவீனவாதிகளால் ஏற்றுக்கொள்ளக்கூடிய இப்னு கதீர் அவர்களே கூறியிருப்பதை காணலாம் (ஆதாரம் அல் பிதாயா வன்னிஹாயா பக்கம் 91 பாகம் 8)

قالت (أم علقمة رضي الله عنها) فدم معاوية بن أبي سفيان المدينة فأرسل الى عائشة ان أرسلي بانجبانية رسول الله عليه وسلم وشعره فأرسلت به معي أحمله فاخذ الانجبانية فلبسها واخذ شعره فدعا بماء فغسله وشربه وافاض على جلده (البداية والنهاية 8-91)

எனவே பரக்கத்தை நாடாமலா இவ்வாறாக முஆவியா (றழி) அவர்கள் நடந்து கொண்டிருப்பார்கள் என்பதை நாம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். அதுமட்டுமல்ல இவ் நவீன வாதிகளால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய இப்னு தைமியாவுடைய மரணத்திற்குப்பிறகு அவரை முத்தமிட்டதாகவும் அவரை குளிப்பாட்டிய தண்ணீரை வந்தவர்கள் அருந்தியதாகவும் முகத்திமது பதாவா இப்னு தைமியாவில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவே இவ்வாறாக இவர்களிடமிருந்து பரக்கத் தேடியதை தெளிவாக இவர்களுடைய கிரந்தங்களில் காணப்படுவதை அறியாததினாலோ இவ்வாறான குழப்பங்களை மக்கள் மத்தியில் பரப்பிவிடுகின்றனர்

அதுமட்டுமல்ல யூசுப்(அலை) அவர்களுடைய ஆடையை கண்பார்வையற்ற தனது தந்தையின் கண்ணில் போட்டபொழுது அதன் பரக்கத்தின் காரணத்தால் பார்வையுடையவர்களாக மாறிய சம்பவம் குர்ஆனில் சூறா யூசுபில் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். எனவே நல்லடியார்களிலும் நல்லவர்களோடு சம்மந்தப்பட்ட பொருட்களிலும் பரக்கத் இருக்கின்றது அதை அங்கீகரிப்பவர்களை முஸ்ரிக்குகள் என்று கூறுவது பாரிய குற்றம் எனபதையும் நாம் அனைவரும் உணர வேணடும். ஏனென்றால் நல்லோரிடமிருந்தோ அல்லது நல்லோரோடு சம்பந்தப்பட்ட பொருள்களிருந்தோ பரக்கத்தேடுவது இஸ்லாமிய மூலாதாரங்களுக்குட்பட்டது என்பதை மேற்கூறிய ஆய்வின் மூலமாக விளங்கிக்கொள்ள முடிகின்றது எனவே நல்லோர்களின் பரக்கத்தினால் நல்லதை விளங்க நம் எலலோருக்கும் அல்லாஹுஃ தௌபீக் செய்வானாக ஆமின்

ஆக்கம்
மௌலவி எம்.எம்.அன்வர் (மன்பயி பாஷில் சகாபி)
ஏறாவூர்




சங்கைக்குரிய மௌலவீ

எம்.எம் அன்வர்

(மன்பயி,பாஸில்,தகாபி)

ஏறாவூர்

இலங்கை

www.jmhkalmunai.blogspot.com